# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

# O.S.No.171/2018

**2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.சுரேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர் •** | **:** | **ரமேஷ்** | **தொழில்** | **:** | |
| **தந்தை பெயர் •** | **:** | **ராஜவேலு** | **கிராமம் •** | **:** | |
| **வயது •** | **:** | **45** | **வட்டம் •** | **:** | **காஞ்சிபுரம்** |
| **நேரம் •** | **:** | **பிற்பகல் 12.47 முதல் 12.55 வரை** | **•** | **:** | |

**வ.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. கடந்த 02.01.1976 தேதியிட்ட ஸ்ரீராமுலு நாயுடு மற்றும் சிலர் வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். **அந்த ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 27.09.1982 தேதியிட்ட வனசுந்தர முதலியார் மற்றும் வாதிகளுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். **அந்த பாகப்பிரிவினை ஆவணம் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாதிகள் பெயரில் உள்ள சொத்துவரி ரசீதுகள் ( எண்ணிக்கை 2) மற்றும் பாதாள சாக்கடை வரி ரசீதுகள் ( எண்ணிக்கை 2) தாக்கல் செய்கிறேன். **அந்த ரசீதுகள் வாசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்திற்கான வில்லங்க

சான்றிதழை தாக்கல் செய்கிறேன். **அந்த ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்தின் வரைபடத்தினை தாக்கல் செய்கிறேன். **அந்த வரைபடம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** திங்கள் தின கோரிக்கையின் போது வாதி நில அளவை சம்பந்தமாக கொடுத்த மனுவிற்கு அளிக்கப்பட்ட ஒப்புகை சீட்டினை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.